கடற்கரை கவியரங்கு எண் – 618

நாள் 02-10-2022

# மாற்றம் வேண்டும்!

மாற்றம் என்பது மனதிலும் வேண்டும்!
தோற்றமும் பொலிவும் உயரம் தராது!
ஆற்றுப் பெருக்காய் ஆட்டும் கனவுகள்;
மாற்றமில் வாழ்வில் மறுபடியும் தோற்கும்!

நூற்றுக் கணக்கில் செல்வம் சேர்த்தால்,
காற்றும் மழையாய் வானவில் காட்டும்!
ஏற்றம் என்பது எதனில் நிறையும்?
ஏற்றம் என்பது மனத்தின் திறப்பே!

சிற்றறிவு இல்லாச் சிந்தை கொண்டு,
கற்றவைப் பேணி கனிவுடன் நடந்து,
சுற்றம் கூடிச் சொந்தம் நிறைந்திட,
மற்றவர் தம்மையும் மகிழ்ந்திடச் செய்யும்;

மனமே வாழ்வின் அணிகலன் என்போம்!
சினமே நம்மைச் சிறுமை படுத்தும்!
தனமே வாழ்வின் செயல்நிலை யன்று!
குணமே அறிவின் ஆற்றலைச் சொல்லும்!

மனமோ நம்மை மருவின்றிச் செய்திட,
மணமாய்ச் சிந்தையை மகிழ்வுடன் நெய்து,
அணைப்போம் உயிர்களை அன்பால் நிறைந்து!
இணையாய் வாழ்வியல் இன்பத்தைக் காட்டும்!

- கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்
02-10-2022 (04.30 PM)

